அகஸ்திய மஹரிஷி

தேசிக நாராயணர்

திருவந்தாதி.

ஆக்கியோன்

உயர்திரு ஞானாநந்த

மணவாள சுவாமியவர்கள்.

பதிப்பித்தவர்

சுவாமி அருணகிரிநாதன்.

1932.

ஓம்
தத்ஸத்
பரப்ரஹ்மணே நம:
அகஸ்திய மஹரிஷிமரபு

தேசிக நாராயணர்

திருவந்தாதி.

ஆக்கியோன்
ஸ்ரீ நாராயண தேசிகரவர்களின் மாணவரும்
ஷ டி தேசிகர் மடாலயத்தின் அதிபதியுமாகிய
உயர்திரு
ஞானாநந்த

மணவாள சுவாமியவர்கள்.

பதிப்பித்தவர்
இந்நூலாசிரியரின் பிரதம சீடன்
சுவாமி அருணகிரிநாதன்.

பதிப்பித்தவிடம்
சென்னை, மண்ணடி,
பூ. ரா. அப்பாதுரை முதலியாரவர்களது
சரவணபவ அச்சுக்கூடம்.
1932




சாது

ஸ்ரீ நாராயணதேசிகர்

நேரிசை வெண்பா.

பார்புகழுஞ் சித்தர் பதினெண்மர் தங்களுளே
யார்கலியை யுண்ட வகத்தியனார்—பேரின்
னிலவுலகி லென்று நிலவிடச்செய் ஞானத்
திலகநா ராயணார்தாள் சேர்.



ஞாநாநந்த
ஸ்ரீமணவாளசவாமிகள்.

ஓம்.
தத்ஸத்.
பரப்ரஹ்மணே நம:.

சாத்துகவிகள்.

அறிவாநந்த வடிகளின் பிரதமசீடர்.
திருநெல்வேலி. வல்லநாடு.
உயர்திரு. சிவராமலிங்க சுவாமியவர்களியற்றிய
எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

அண்டரும் போற்று மகத்திய முனியா றமர்ந்தநா ராயணக் குரவன்
தொண்டமர் மணவா ளப்பெயர் சான்றோன் றெடுத்தனன் சொற்
றமிழ் மலரான், மண்டக மன்பார் மதுவொடு ஞான மணங்கெழுப்
புதியநன் மாலே, கொண்டதன் னிறைநா ராயணர் திருவந் தாதி
யென் மதிவலோர் கொளவே.

சிதம்பரம். மௌனசுவாமிகள் மடம்
ஸ்ரீ. செல்லப்ப ஞானதேசிக சுவாமிகளின் மாணவர்
உயர்திரு. முக்தாநந்த ஸ்வாமியவர்களியற்றிய
பன்னிரண்டு சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

சீர்பெருகு மலயமுனி வழிவந்த நாரண
 தேசிகன் றனதடியிணைச்
செவ்வே யணிந்தவ னவனருட் பார்வையாற்
 றீதொரீஇ நின்றமேலோன்
பார்புகழ் துறவுவை ராகமுட னுயிரெலாம்
 பயன்பெறு குணக்குன்றனன்
படிறிலா ஞாநவா நந்தமண வாளன்சீர்ப்
 பண்டைநூல் பலவு மாய்ந்தோ
னேர்பாவு முலகனைத் தும்முய்ய வருளினெ
 லெழிற்குருவின் மாபெருமையோ
டேத்துசா தனசாத்தி யங்களெல் லாந்தொகுத்
 தியற்றுநூல் பெயர்மொழிகுதுந்
தார்சூடி வேதாந்த மோதுமேத சிகநார
 ணன்றிருந லந்தாதியே
தரணியிற் புகழோங்கி யென்றுமிது நின்றுயசீர்
 தழைத்துமிக வாழ்கமாதோ.

சென்னை. ஹிந்து தியலாஜிகல் ஹைஸ்கூல் தமிழாசிரியரும்
தருக்க வேதாந்த போத காசிரியருமாகிய
ஸ்ரீமத். கோ. வடிவேலு செட்டியாரவர்கள் இயற்றிய

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

மறையுரைக்கும் பெரும்பொருளை வந்தடைந்து தோத்திரஞ்செய் மாண வர்க்கு, முறைதிறம்பா மற்புகன்று முத்தி நெறி காட்டியருண் முத்தன் மாயைக், கறையகறே சிகநா ரா யணர்திருவந் தாதியினைக் கற்றோ ரேற்கக், குறைவறு ஞா நாநந்த மணவாள முனியியற்றிக் கொண்டான் சீரே.

ஸ்ரீ. சுப்பிரமணியசிவம் அவர்களின் மாணவர்
உயர்திரு. சுவாமி சுந்தரபாரதியா ரவர்களியற்றிய

நேரிசை வெண்பா.

தேசிகநா ராயணரின் சீரதனை யெஞ்ஞான்று
மாசகல வோதி மகிழவே—பேசுந்
திருவந்தா திப்பெயராற் றிவ்விய நூ லீந்தார்
திருமணவா ளஸ்வாமி தேர்ந்து.

ஸ்ரீ நாராயண தேசிகரின் மாணவர்
தமிழ் வித்வான். கவிபூஷணம். பெங்களூர்
ஸ்ரீமத். சே. கோ. கணபதி நாயகரவர்களியற்றிய

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

இருள்வளர்க்கு மனவழியே சென்றெவர்க்கு மிடையூறே யிழைப்பவர்க்குந், தெருள்வளர்க்கும் பொருண்மலிந்த தேசிகநா ராயணர்தந் திருவந் தாதி, மருள்வளர்க்கும் வழியடைக்கு மாஞாநா நந்தமணவாள சாமி, யருள்வளர்க்குங் குருபத்தி யவனிமுற்றும் பரந்திடற்கா வளித்தான் மாதோ.

திருத்துருத்தி. இந்திரபீடம். ஸ்ரீ கரபாத்திர சுவாமிகளாதீன வழிவந்த ஸ்ரீ சச்சிதாநந்த சுவாமியவர்களின் சிஷ்யப்ர சிஷ்யரும், சென்னை. பெருமாள்பேட்டையில் வசிப்பவருமாகிய

ஸ்ரீமத். தே. அ. சாமிகுப்புசாமி யவர்களியற்றிய

நேரிசை வெண்பா.

நந்தாத தேசிக நாரா யணர்திரு
வந்தாதி யென்னுநூ லாய்ந்தளித்தார்—வந்தார்
தணவாவின் பெய்தச் சமைஞாநா நந்த
மணவாள சாமி மகிழ்ந்து.

ஷை ஸ்ரீமத். தே. அ. சாமிகுப்புசாமி யவர்களின் திருவடித் தொண்டர். பிரசங்க சிந்தாமணி திருவான்மியூர் ஸ்ரீமான். த. கோவிந்தசாமி பிள்ளையவர்களியற்றிய

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

ஈசனவ னேவந்து நமை யாண்டா னெனவுலக மிருங்கை கூப்புந்
தேசிகநா ராயணர்மேற் சிறந்ததிரு வந்தாதி செப்பி னான்காண்
தேசிகநா ராயணர்தா ளென்னளுந் தன்னகத்தே சிந்தித் தேத்து
மாசறுஞா நாநந்த மணவாள சுவாமியெனும் மதிவல் லோனே.

ஷை ஸ்ரீமத். தே. அ. சாமிகுப்புசாமி யவர்களின் திருவடித்தொண்டர்

சென்னை, இராயபுரத்திற்கடுத்த சிவஞானபுரம், ஸ்ரீமான் காளத்தி. இ. சிதம்பரசாமி புராணிகரவர்களியற்றிய

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

திக்கனைத்தும் புகழ்நிறைத்த தேசிகநா ராயணர்தந் திருவந் தாதி
யெக்கலையு முணர்ந்தவர்ஞா நாநந்த மணவாள னென்னுஞ் சாமி
யிக்கவினு ருலகிலுளார் தினமோதி யோதியுளத் திருளை யோட்டி
மிக்கவறி வாநந்த வுருவாகி விளங்கிடவே விளம்பி னாரால்.

சென்னை, பெத்துநாய்க்கன்பேட்டை, தையப்பமுதலி வீதி,
Retired Sub-Registrar.
ஸ்ரீமத். மேலவலம், சிவகாருண்ய முதலியார், B. A.
அவர்களியற்றிய
எண்சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

அங்கையிற்றண் ணீர்க்கடலுந் தமிழ்க்கடலுஞ்சேர
வடக்கியமா முனிவனகத் தியன்மரபில் வந்த
துங்கமுறு சாதுநா ராயணதே சிகர்தஞ்
சோதியடி யைப்பரவச் சொன்மலரைக் கொண்டு
சங்கையின்ஞா னாநந்த மணவாள சாமி
சார்ந்தவடி யார்புலவர் தாமகிழ்ச்சி கூர
பங்கமிலா வந்தாதி வெண்பாவோர் நூறும்
பழயவினை தீர்ந்தொழியப் பகர்ந்திட்டான் மன்னே

ஆசிரியர் கோ. வடிவேலு செட்டியார் அவர்களின் மாணவர்
திருவளர். ச. கந்தசாமி முதலியாரவர்கள் இயற்றிய
அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

தந்தையாய்த் தாயு மாகித் தாரமாய்த் தமரு மாகி, முந்தையூழ் வினைகட் கேற்ப முழுதுல களிக்குஞ் சோதி, யெந்தைநா ராய ணப்பே ரியற்குரு வாகி நின்று, சிந்தைநோ யகற்று தற்குச் சீரிய மருந்து மானன்.

அகத்திய மரபின் வந்தஅன்னதே சிகனைப் போற்றி, மகத்துவ ஞான நந்த மணவாளன் மாசி லாதா, னிகத்திய லெம்ம னோர்க்கென் றீந்தனன் திருவந் தாதி, சகத்திய லன்பர்க் குற்ற சாதன மாகு மன்றே.

ஸ்ரீநாராயண தேசிக ரவர்களின் மாணவர்களிலொருவராகிய
பண்டித. ஸ்ரீ. பூ. அ. கோவிந்த ராஜதாச ரவர்களியற்றிய
அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

மாசில்லா வுள்ளமுடன் வேதாந்தக் கலைமதியும் வழங்கி யார்க்கும்
ஆசியதே பகருமென்றன் குருபானர் திருவடியே யன்பா னேக்கி
வாசியறிந் தான்றவர்தங் கருத்தொக்க நிலைக்குமண வாள ஸ்வாமி
தேசிகநா ராயணர்தந்திருவந்தா தியைக்கூறித் திகழ்ந்தான் மன்னே.

பொதிகைமலைச் சித்தர் மரபு
ஸ்ரீ. நாராயண தேசிகர் மாணவர் பண்டித ஸ்ரீ.
பூ. அ. கோவிந்தராஜ தாஸரவர்களின் தலைமை மாணவர்
ஸ்ரீமத். தி. முனிசாமி நாயக ரவர்களியற்றிய

நிலைமண்டில ஆசிரியப்பா.

எழுத்தறி வித்த விறையகத் தியனார்
விழுக்குரு மரபின் வேதாந்த வித்வ
சிரோமணி நாரண தேசிகர் மீது
பரோப காரப் பான்மையிற் றேசிக
நாரா யணர்திரு வந்தாதி நவின்றனன்
பேரா வன்பின் பெருந்தகை யெற்கு
மல்லன்மா ஞால மறையினு மறையாக்
கல்விப் புணையாய்க் கையளித் துதவிய
தீன தயாள திருவுரு வுடையோன்
ஞானநூல் வல்ல ஞாநா நந்த
மணவாள சுவாமி வள்ளுவர் சொற்ற
குணமெனுங் குன்றுடைக் கோவலன் றனது
நன்றியை விரித்து நானுரைத் திடவென்
னின்மொழிப் பூக்களை யிரைத்தனன் மகிழ்ந்தே.

சாத்துகவிகள் முற்றிற்று.

இந்நூலாசிரியாரவர்களின்
பிரதம சீடன்

சுவாமி அருணகிரி நாதன் இயற்றிய

சிறப்புப்பாயிரம்.

சச்சிதா நந்தத் தனிமுத லாகி
யிச்சக மியாவு மீன்றளித் தழித்துப்
பச்சிலை யிடினும் பத்தர்க் கிரங்கி
மெச்சிச் சிவபத வீடருள் கின்ற
வச்சிவன் றானே யவனியின் மீதி
லிச்சையோர் சிறிது மின்றியே தோன்றி
மெய்க்குரு வடிவாய் விளங்கி யன்பரின்
பொய்ச்சிதா பாசம் போக்கிவீ டருளும்

என்பதனால்

அன்றொரு நால்வர்க் கவன முரைத்துங்
குன்றுதோ றாடுங் குமரசற் குருவா
யிகத்தினிற் றோன்றி யெம்மர போங்க
வகத்திய முனிவர்க் கருளியு மவன்வழி
வந்த ஸ்வகீயா நந்தமா யோகி
யெந்தை நாத முனிவனா யீண்டு
மந்தரு முணர வத்துதத் துவத்தை
வந்தவர்க் குரைத்தும் வராதவ ரிடத்திற்
றண்ணளி யோடு தானே சென்றவ
ரெண்ணுதற் கரிய வின்ப மளித்து
மனுமா பறவை மற்றுள வுயிரினு
மனுரூ தமதா யறிவினுக் கறிவா

யணுவுக் கணுவா யமர்ந்தபே ரொளியைக்
கணுமுதிர் கரும்பெனக் கரதலக் கனியெனத்
தந்திடத் தமிழிற் சாற்று மநுபவா
நந்ததீ பிகையென நவின்று மூன்றுநூன்
மறையெனத் தந்து மாநில மக்கள்
குறைதனைத் தீர்த்துக் குவலயம் போற்ற
வோடுசெம் பொன்னு மொத்திட நோக்கிப்
பிடுறு மேறுபோற் பிறங்கிய ஜீவ
முத்தவே தாந்த வித்வ சிரோமணி
வித்தக நாரண மெய்க்குரு மீது

"தேசிக நாரணர் திருவந் தாதியென்
ருசறும் பெரியா ரடியவர் பன்னூல்
கற்றவர் மற்றவர் களிப்புற வோர்நூல்
சொற்றன னன்பு சொட்டச் சொட்ட
வன்னவ னியாரெனி லறைகுதுங் கேண்மோ
விண்ணிலந் தன்னி லேற்றமிக் குடையதாய்
தொண்டர்க ணிறைந்ததாய்த் துலங்கு கின்ற
தொண்டைமண் டலமெனுந் துயநன் னாட்டிற்
பண்டைநான் மறைகள் பரவிடு சீல
கண்டர்கா மாட்சிவாழ் காஞ்சிமா நகரின்

தென்கீழ்த் திசையிற் செந்நெலுங் கமுகு
மன்னிய கழனியும் வாவியுங் கூபமுங்
கன்னலுந் தெங்குங் கடவுளா லயமும்
பன்னருந் தவத்தோர் பாவலர் மடங்களு
மடுபசி தீர்க்குங் குடிகளு நிறைந்த
படுவூ ரதனி னெடும்புகழ் பெற்றுச்

சதுருடன் வாழுந் தன்னிக ரில்லாப்
பதுமவே ளாள பரம்பரை யதனிற்
கார்நிற மேனிக் கடவுள் பத்தியுஞ்
சீர்மலி காம தேனுவைப் போல

நாரா ரீகையு நபக்கக் கொண்ட
வீரா சாமியா மெய்ம்மை யாளரு
நாரா யணிபோ னலமெலா மமைந்த
வேரார் கற்புக் கிலக்கிய மாய
நாகம் மாளெனு நல்லறக் கிழத்தியு
மேக மனதுட னியற்றிய தவத்தான்
வந்து பிறந்து வளர்மதி போல
வைந்து பருவத் தகமகிழ் வுடனே
செந்தமிழ்க் கற்றுச் செழுங்கிளை தாங்கப்
புந்தி தன்னுட் பொற்ப வுன்னி

செம்பொரு ளீட்டச் சென்னையைச் சார்ந்து
கும்பனி யச்சுக் கூடந் தன்னில்
வேலையி லமர்ந்து மெய்ம்மையோ டொழுகிக்
காலையு மாலையுங் கடவுளை வழிபட்
டதிதிபூ சைமுத லாயவைங் கடமையும்
விதிவழிச் செய்வோர் மெல்லியை மணந்தே
யில்லறந் தன்னை வியல்புற நடத்தி
நல்லவர்க் கெல்லா நலம்பல செய்துதன்
னுடன்பிறந் தாரை யோம்புதற் றனது
கடமையென் றெண்ணிக் களிதொழிற் செயுநாள்

பாபந் தேய்ந்து பரசிவ னருளாற்
றீபச் சுடர்போற் சிந்தை தெளிந்து

நித்தியா நித்திய வத்து விவேகம்
புத்தியிற் றோன்றப் பொன்னுல கின்பமு
மித்தையா மென்ன விராகமேற் கொண்டு
சித்தச் சமதம சிரத்தை யுபரதி
வருதுயர் சகித்தல் மதிசமா தான
மரியஜிஞ் ஞாசை யாதிய நான்கும்
பூரண மாகப் புந்தியி லடைந்தே
யாரண முடிவை யறிந்திட விரைந்து
நாரண குருவி னற்றாள் வணங்கி
சீரண வுடலுஞ் செல்வமு மாவியுந்
தத்த முனக்கே தயாபர ஞான
வித்தக வென்றன் வினையொழித் துன்து
நித்திய பதத்தை நீயெனக் கருளென
சத்திய மாகச் சரணடைந் திடவே
வத்துவைக் காட்டுந் தத்துவ மசியை
யத்த னாரண னருளக் கேட்டே
மைதழை நெஞ்ச மறலியை வதைத்துப்
பைதல்க ளறியாப் பரசிவ வடிவே
தானெனக் கண்டு சஞ்சல நீக்கி
வானென நிற்கும் மாதவ முடையோன்
றன்னைப் போலச் சகத்தினி காணு
மன்னுயிர் யாவும் வாழ்வுற வேண்டித்
தருக்கவே தாந்த சாத்திர மதனைச்
சருக்கரைப் பந்தலிற் றனித்தேன் மாரி
பெய்வது போலப் பேசுநா வலவ
னுய்வகை யறியா துழன்ற நாயினேன்
சென்னியின் மீது திருவடி சூட்டி
பின்னமில் லாத பேரா நந்த

மென் னுரு வாக விலங்கிடச் செய்து
பன்னரு வினையெலாம் பாழ்படச் செய்தவன்
தண்ணளி மிக்க தயாபர னெம்மிறை
புண்ணிய சொரூபன் புனிதமெஞ் ஞானி
திருநா ராயண தேசிகன் பெயருங்
குருமுனி மரபுங் குவலய மெல்லாம்
பரவுதற் காகப் பற்பல விடத்துத்
திருமட மமைக்கச் செய்துசென்னையிற்
சாதுநா ராயண சற்குரு மடமென
வோதுதற் கென்று முயர்மட நிறுவினோன்

செலவறு சீர்சால் சீவன் முத்தி
விலட்சண நந்த மேவுதற் காக
வேற்றுத் துறவற மெம்மனோ ரியாவரும்
போற்றிட நிற்கும் புண்ணிய முனிவன்
குணவா ரிதியெனக் குவலய மேத்து
மணவாள தேசிக மாதவத் தோனே.

அவையடக்கம்.

வானமெங்கும் வட்டமிடு மாகருட னோடுபல
வீனமச கம்பறந் தேகுவபோல்—யானுலகிற்
கற்றவர்கள் முன்னிற் கழறுமிவ் வந்தாதிக்
குற்றம் பொறுக்கை குணம்.

ஓம்.

தத்ஸத்

விநாயகன்றுணே.

தேசிக நாராயணர் திருவந்தாதி.

காப்பு.

வெண்பா.

அகரம்போன் மன்னு மறிவாகி யோமென்
முகமா யிலகு முதல்வா—விகமீதில்
வெண்பாவந் தாதியால் வித்தகநா ராயணன்சீர்
பண்பாகப் பாடிடக்கண் பார்.

நூல்.

1 பார்மீதி லோங்கிப் பயிர்தழைப்பப் பெய்யுமொரு
கார்போல வந்தென் கலிதீர்த்துப்—பேர்வடிவ
மற்ற பரசிவமா யாக்கிவைத்த நாரணனு
நற்றவனே நின்னருளை நல்கு.

2 நல்குவவெல் லாநல்கு நாரா யணதேவே
நல்குரவெல் லாமொழித்து ஞாலமதிற்-பல்விதத்துந்
தீராப் பவநோயைத் தீர்த்த தயாபரனப்
பேராளன் சீர்நாவே பேசு.

3 பேசுங்கா ரணனைப் பின்னமற நம்முளத்தே
தேசுபெற வெந்நாளுஞ் சிந்திக்கிற்—பாசந்தான்
போனவிடங் காணமற் போநெஞ்சே போனவுடன்
மோனநிலை யெய்து முடிபு.

4 முடிவாகும் வேத மொழியாலே ஞாந
வடிவான தன்னிலையில் வைக்கப்—படிமீதில்
வாரா வுருவாக வந்த பரமகுரு
நாரா யணனைநெஞ்சே நாடு.

5 நாடுவையே னெஞ்சமே நாரா யணன்பதமே
நாடுவதல் லால்வேறு நாடாதே—நாடுகின்ற
விவ்வுலகி லெவ்விடத்தி லெவ்வடிவைக் கண்டாலு
மவ்வடிவாய் நிற்பா னமர்ந்து.

6 அமர்செய்யும் பொல்லாத வஞ்ஞான மென்னு
ளமராமற் போக்கியறி வாக்கி—யெமனாலும்
பொன்றாப் பிறவியெலாம் போக்கியநா ராயணனே
யன்றறிவா மென்னா தடை.

7 அடைவாயே னாரணனை யாநந்த மீவான்
கடையாம் பிறவியிருட் காய்வான்—முடைநாறு
மன்னவுடன் மீதிருக்கு மாசையெலா நீக்கியந்தப்
பன்னருஞ்சீர்ப் புண்ணியனைப் பார்.

8 பார்முழுதுந் தானாய்ப் பரந்துநின்ற நாரணனை
யார்வமொடு போற்று மடியவரே—பார்மீதிற்
றத்துவசங் கத்தின் றலைவராய் வீற்றிருந்து
பெத்தமறப் பாரெனவே பேசு.

9 பேசுதற் கொண்ணாத பேரின்ப வாழ்வதனைச்
சாசுவத மாயளிக்குஞ் சற்குருவாய்க்—காசினியி
லெம்மனோ ரீடேற வெம்முருப்போல் வந்தகுரு
சிம்மநா ராயணன்றாள் சேர்.

10 சேர்ந்து குருபரனைச் சேவைசெயி னுன்றனக்கு
நேர்ந்த வினைமுழுது நீங்குமெனத்—தேர்ந்தநால்
வேத முடிவு விளம்புவதா னாரணனென்
னாதன்றா ளேத்தவரு நன்று.

11 நன்றுதீ தென்றேதி நாமரூ பங்களிலே
யென்றுநீ மோகித் திருக்காமற்—குன்றுத
சச்சிதா நந்தத் தனிமுதலா நாரணன்பா
லிச்சலமாய் நெஞ்சமே நில்.

12 நில்லாம னெஞ்சமே நீதவறிச் செல்லுவையேற்
பொல்லாப் பிறப்பிறப்புப் போகாது—நல்லாய்கேள்
சோதனைகட் கெட்டாத் துரியநடு வீற்றிருக்க
நாதகுரு நாரணன்சொன் னம்பு.

13 நம்பு குருபரனை நாசமிலா வீடடைவாய்
வம்புமத பேதத்தின் மாழாதே—யம்பரமா
யேகமாய் நம்மு ளிலகுகுரு நாரணன்போன்
றுகலா நெஞ்சே யறி.

14 அறியாமை நீங்கியே யான்மநிலை யெய்தக்
குறியாதுந் தத்வமசி கூறு—நெறியாவு
மாராய்ந்து நன்று யதிற்போந்து வாழுதற்கு
நாரா யணன்சொன் னலம்.

15 நலந்தருமா வாக்கியமே நான்மறையி னுண்மைப்
பலன்றருமா வீடடையப் பண்ணு—மலமொழிய
வேறுமொழி யில்லையென விண்டகுரு நாரணனுற்
கூறுமொழி யேதுணையாக் கொள்.

16 கொள்ளாம னன்னூலைக் கோதுடைய் நூல்பயின்று
துள்ளித் திரியுந் துடுக்கடக்கிக்—கள்ள
மகம்பாவ மெல்லா மறநீக்கி நெஞ்சே
யகம்பிரம நாமென் றமர்.

17 அமரவாழ் வெய்த வகத்திலெண் ணுமற்
றமராசை யாழிதனிற் றூழு—மமநெஞ்சே
யாரணங்கள் கூறு மயமான்மச் சொற்பொருளை
நாரணனே சொன்னு னமக்கு.

18 நமக்கும் பிறவுயிர்க்கு நாதனுய் நின்று
மெமக்கருள வெண்ணியே யிங்குச்—சுமக்கு
மூடலாதி கொண்டெடன் னுளிவடிவை யிய்ந்த
தடங்கருணை நாரணன்பாற் றங்கு.

19 தங்குமிரு ணீக்குகின்ற தத்துவஞா னத்தரிடந்
துங்கவறி வாய்விளங்கு ஜோதிமயச்—சங்கரனே
யாதிநா ராயணனு யாட்கொண் டருவினையாங்
கோதுகளைக் காய்ந்தான் குறி.

20 குறித்த வழியொழுகிக் குத்திரங்கோ ளெல்லாம்
பறித்தெறிய நெஞ்சமே பாய்ந்து—மறித்கல்செ
யஞ்ஞான சந்தேக மாசாபா சங்களெரி
பஞ்சாக்கு நாரணன்றுள் பற்று.

21 பற்றுகளெல் லாமறுத்துப் பாவனு தீதமுற
நற்றவத்தோ ரேத்துகுரு நாரணன்றுள்—பற்றியே
போற்றுவாய் நெஞ்சே புவனபோ கங்களெலாந்
தோற்றமெனக் காணவின்று தொட்டு.

22 தொட்டவிட மெல்லாநின் றூய வறிவெனவே
பட்டயம்போற் காட்டும் பாகுருவைக்—கிட்டுநெஞ்சே
யீதலால் வேறுவழி யில்லை யெவர்களுக்கு
மாதலாற் சொன்னே னறி.

23 அறிவாகுந் தன்னை யறியாமற் பன்னாள்
சிறியாரைச் சேர்ந்தொழுகுந் தீமைச்—செறிவாலே
யெல்லையிலா ஜன்ம மெடுத்தலைக்கும் பான்முளையைக்
கல்லியெறி வான்குரவன் காண்.

24 காண்பானுங் காட்சியுங் காண்பொருண் மற் றெல்லாமு
மாண்புடைய நின்னையலான் மற்றில்லை-காண்காணென்
றத்துவித ஞான மளித்தகுரு நாரணனே
முத்தியருண் முன்னவனா முந்து.

25 முந்தைத் தவத்தான் முடிவாம் பிறப்படைந்துஞ்
சந்ததமுஞ் சாதுக்கள் சார்பதனாற்—பந்தமதை
போக்கவழி தேடாத புல்லியர்க்கு நாரணன்சொல்
வாக்கியத்தான் வாய்க்குமுத்தி வந்து.

26 வந்து பிறந்து மடவார் தனைமணந்து
பந்து ஜனங்களிடம் பற்றுந்று—முந்தைநிலை
யாயாம னின்றேனை யாட்கொண்ட நாரணன்சீ
ரோயாம னாவேநீ யோது.

27 ஓதுகின்ற வுண்மைநிலை யுற்ற பெரியோர்கள்
காதுகடும் பேதநிலை காணாரென்—றோதுவதாற்
சின்மயா நந்தகுரு தேசிகனைச் சேர்ந்திடினோ
தன்மயமாய்ச் செய்திடுவன் றான்.

28 தானான தன்மயத்திற் றத்துவவா ராய்ச்சியினான்
ஞானாநந் தத்தைநெஞ்சே நாடினாற்—றானாகு
மெல்லையிலா நந்தத்தை யீங்கடைவோ மிப்பொழுதே
நல்லகுரு நாரணன்சொன் னம்பு.

29 நம்பு மடியவர்க்கு நாசமிலா வீடருளி
வம்புமத பேதிகள்பால் வாராம—லம்பரமா
யேகமா யெங்கு மிலகுகுரு நாரணரின்
சோகமற்ற சொல்லே சுகம்.

30 சுகமா முனிவரருஞ் சுத்தநிலை யெய்த
ஜகமேற் குருபரனைச் சார்ந்தா—ரிகமேனம்
பொல்லாப் பிறவிமயல் போக்கவந்த நாரணன்பேர்
சொல்லாதென் வாக்கேநீ சொல்.

31 சொல்லும் பொருண்முடிவைச் சூக்குமமாய்க் காணவி [டா
தல்லும் பகலு மயராமற்—றொல்லைசெயும்
பஞ்சபே தத்திரையைப் பாழ்செய்த நாரணனை
வஞ்சமறச் சென்னி வணங்கு

32 வணங்குதற்கு நாணு மடநெஞ்சே யிந்த
நிணவுடலி லெத்தனைநா ளிற்பாய்—குணங்கடந்த
மேலோனு நாரணன்பான் மேவுவையேற் பெற்றிடுவா [ய்
மாலோன் பெறற்கரிய மாண்பு.

33 மாண்புடைய நாரணன்சொல் மாசிலா வீடளிக்குங்
காண்பாய்நீ தீபிகையைக் கண்டாயேற்—சேண்போ [லும
பூரணத்தி லேமறைந்து போதமய மாவாய்நீ
யாரணத்தி னுண்மை யறி.

34 அறிவே பிரம மறிவே யுலக
மறிவே யுனதுருவ மாகு—மறிவற்ற
வீனவுட னீயல்லை யென்றுரைத்த நாரணனன்
மோனநிலை பெற்றேன் முடிபு.

35 முடிவிலாப் பல்பிறவி மோகத்தை நீக்கி
யடிநடுவு மற்றதோ ரான்ம—வடிவதனைப்
பார்பா ரெனக்காட்டும் பாவலனு ராயணன்றன்
சீர்மைதனை வாக்கே நீ செப்பு.

36 செப்புங் கலைகளெலாஞ் சேட்டை மனமறவே
தப்புவழி செல்வோர்க டாமறியா—ரொப்பில்லா
வாரியனைச் சார்ந்தாங் கவன்மொழியை யேந்துவையேல்
சீரடைவாய் நெஞ்சே தெளி.

37 தெளியாரைக் கூடித் திரிவாயே னெஞ்சே
நெளியும் புழுக்கூட்டை நீங்கா—யளிபோலப்
பேராரு மின்பப் பெருக்கிற் குளிப்பதற்கு
நாரா யணகுருவை நாடு.

38 நாடுமனை மக்களெலா நாசமுறு மற்காக்க
வாடித் திரிந்துழலும் வன்னெஞ்சே—கூடிவிட்டுன்
னுவிதனைக் கொண்டேக வன்னுள் வருமெமனை
யேவில கென்பவரா ரிங்கு.

39 இங்கங் கெனுதபடி யேகமாய் நித்தியமா
யெங்கு நிறைந்தபே ரின்பமுட்—டங்குதற்கு
நாரா யணகுருவை நாடோறும் போற்றுவையேல்
வாராவின் பாமுன் வசம்.

40 வசமாய்க் கருவில் வருந்தி வெதும்பித்
தசமாதந் தன்னிலொரு தையல்—கசுமால
யோனிவழி தள்ள வுலகிற் கிடந்துழலு
மீனமதைப் போக்கினன்று ளேத்து.

41 ஏத்துவாய் நெஞ்சே யெளியே னபாத்திரனு
பாத்திரனு வென்றுபன்னுட் பாராம—லோத்தின்
முடிபொருளைக் காட்டு முனிவனு மெந்தை
கடிமலர்ப்பூம் பாதமதைக் கா.

42 காவகத்தே பன்னுள் கடுந்தவஞ்செய் யோகிகளு
மேவுவதற் கெட்டாத மெய்ப்பொருளைத்—தாவு
மனமே நமக்களித்த வான்கருணைத் தேவைத்
தினமு நினைந்திருத்தல் சீர்.

43 சீர்மேவும் வேதச் செழுங்கடலைத் தான்பருகிப்
பார்மேல் முமுக்ஷுப் பயிர்வளரக்—கார்போலப்
பெய்து கருணைமழை பேரின்ப முண்டாக்குஞ்
செய்யகுரு மேகமதைத் தேடு.

44 தேடும் பொருள்தனைச் சிக்கனமா கப்புதைத்து
மாடுமனை மக்களுடன் வாழ்வதுவே—வீடுதரு
மென்றெண்ணு மென்னை யெழிலார் குருநாத
னன்றிவைகள் சாதனமென் றான்.

45 சாதனமல் லாததனைச் சாதனமென் றந்தோபொய்ப்
போதனைசெய் புல்லியர்பாற் போகாம-லாதவன்போல்
வேத முடிவை விளக்கி யெனையாண்ட
நாதனு ராயணன்பா னண்ணு.

46 நண்ணு முமுட்சுவெற்கு நாடோறுந் தொண்டன்பாய்
பண்ணு பலிக்குமுத்தி பாங்காவீ—தெண்ணென் [ப்
றறைவாரைக் கூடி யலையாம லென்றன்
குறைதீர்த்த நாரணனைக் கூடு.

47 கூடுதனில் வாழுங் குருதுவிட் டோடுமுனை
பாடுபட்டுத் தேடு பரகுருவைத்—தேடுகின்ற
முத்திக்கு மூல முடிவாங் குருமொழியே
சத்தியமென் னெஞ்சேநீ சார்.

48 சார்ந்து குருவைச் சமதமங்கள் பெற்றவரே
கூர்ந்தமனச் சாந்திதனைக் கூடுவ—ரோர்ந்திடுநீ
ஈதன்றி வேறுநெறி யில்லையென்ற நாரணரின்
போதனையை யுன்னுமனம் பொன்னு.

49 பொன்னிடத்திற் றோன்றுகின்ற பூடணமெல் லாமந்த
பொன்னையன்றி யுண்டுகொலோ புந்தியே-பின்னமிலா
வுன்னறிவாற் காணு முலகு முயிர்பரமு
முன்னுருவே யென்றவனை யோது.

50 ஓதவு மோதி யுணர்வதற்கு மெட்டாத
போதவடி வாக்கிவைத்த பூரணனு—மாதிகுரு
நாரணன்ற னற்புகழை நாவாலே பாடுபவ
ராரணத்தி னுண்மையறி வார்.

51 அறிவாலே காணு மசரசர மெல்லா
மறிவாய்க் கரைத்துவிட்ட வையன்—குறிவழியே
செல்வாயே னெஞ்சே சிவவடிவந் தானாகி
வெல்வா யவித்தையெலா மே.

52 அவித்தையினா லந்தோ வகிலமதி னுழற்
பவித்து மிறந்தும் பலநாள்—தவித்த
நிலைகண் டிரங்கிவந்து நேதிகளைந் தானை
யலைகின்ற நெஞ்சே யறி.

53 அறிவே சிவமாகு மன்னியமா யில்லை
குறியே சிவமாகக் கொள்ளேல்—சிறியார்கள்
மோகத்தா லுண்மைதனை மோசித்துப் பன்னூறு
மாக மெடுப்பா ரவர்.

54 அவரவர்க டன்னினைவே யண்டஞ்ஜீ வேசர்
கவராம் மனமிறந்தார் காண்பார்—தவறும
லீதே முடிவாகு மென்று நமக்குரைத்த
போதகுரு நாரணன்றாள் போற்று.

55 போற்றுங் குருவடிவம் பூத வுடலல்ல
தோற்றங் கடந்த துரியமாம்—போற்றுகின்ற
வேதங்க ளெல்லாம் விளக்குவது மீதேயா
மாதவத்தோர் காண்பார் மகிழ்ந்து.

56 மகிழ்ந்தே யனவரதம் மாசற்றார் சங்கம்
புகுந்த புனிதற்கே போத—மிகந்தனிலே
வந்து பொருந்துமென்ற வள்ளல்நா ராயணன்சொல்
லந்தந் தருமென் றமர்.

57 அமரர்க்கு மெட்டாத வானந்த போத
நிமல குருவருளா னேரு—முமலமறு
மானந்தம் பொங்கு மகவிருளு நீங்கிவிடு
மோநநிலை தங்கு முடிபு.

58 முடிபுநிலை காணாமல் மோக மயக்கான்
முடிவில் பிறப்பாழி மூழ்கா—தடியேனை
யாரியனாய் வந்திங் கறிவுருவ மாக்கிவைத்த
பேரியனா ராயணனைப் பேசு.

59 பேசுநா வன்மைப் பெரும்புலவன் பேராத
மாசுதனை நீக்கு மணவாளன்—தேசுடையான்
பேராழி யன்னநிறை பெட்புடையான் யாவனம்
நாரா யணனெஞ்சே நாடு.

60 நாடும் பொருளெல்லா நானல்ல நாடாம
னுடியிருக் கும்பொருளே நானெஞ்சே—நாடும்
பொருளெல்லாம் மண்ணாகிப் போகுபாவை மீதின்
மருள்கொண்டு செல்லாமல் வா.

61 வாவாவென் னெஞ்சமே வாழ்வுபெற நங்குரவ
னுவாலே சொன்னெறிபி னண்ணுதற்—கோவாமற்
றேவாதி தேவர்களுந் தேடுகின்ற நாரணன்சீர்
நாவாலே பாடிடுவோ நாம்.

62 நாமரூ பங்கடந்த நாட்டத் திலகுபொரு
ளோமஜெப யாகத் தொளிர்வதோ—காமாதி
சற்பனையெல் லாநீங்கிச் சற்குருநா ராயணனுஞ்
சிற்பரனைச் சேரிலுண்டு சித்து.

63 சித்தன் மரபு சிறக்கவரு நாரணனைப்
பத்தி சிரத்தை பணிவோடு—நித்தநித்தம்
போற்றுதலு மன்னுன் புகன்ற பணியதனை
யாற்றுதலு நங்கடமை யாம்.

64 கடமையென வெப்பணியுங் காசினியிற் செய்யின்
மடமையறு முத்திநிலை வாய்க்கு—மடமாந்தர்
காமியத்தாற் செய்யறத்தாற் கன்மமறு தென்றவெங்
சாமிகுரு நாரணன்றுள் சார். [கள்

65 சார்ந்து சகலநிலை சாசுவத வின்பத்தை
யோர்ந்த பெரியோனே யுள்ளபடி—தீர்ந்தமகா
முத்தனெனச் சொல்லு முதனூ லுபநிடத
சித்தாந்த மன்றோ சிறப்பு.

66 சிறப்புடைய ஞானகுரு செப்புநெறி சென்று
பிறப்பிறப்பை நீங்காத பேதா—யறக்கொடிய
பாபமெலாம் போக்கப் பகரநுப வாநந்த
தீபிகையை நாடோறுஞ் செப்பு.

67 செப்பு மொழியுடனே சிந்தனையு மோர்படித்தா
யொப்பவினை செய்பவர்த முள்ளத்தே-யெப்பொழுது
சத்துவமே சேடித்துச் சாந்திநிலை யெய்துமென்ற [ஞ்
வுத்தமநா ராயணனை யுன்னு.

68 உன்னிலையை நோக்கா துலகப் பொருளினையே
நன்னிதியென் றெண்ணி நலனிழந்—தின்ன லுறுஞ்
சின்னமதி நீக்கியரு டேசிகனை யேத்துவரே
வின்னற் பிறப்பொழிப்பா ரிங்கு.

69 இங்கங் கெனாதபடி யெங்கு நிறைசிவமே
பங்கமிலா நின்வடிவம் பாரென்றென்—னங்கமெலா
மாநந்தம் பொங்கியெழ வாக்குமருட் டேசிகன்சொல்
மோநக் கரும்பிலுதி முத்து.

70 முத்திக்கு மூல முனைப்பற்ற வாரியன்சொல்
சத்யநடை சாந்தஞ் சரிவாரீ—நித்தம்
பழகிவரு வர்யேற் பரப்பிரம மாவா
யழகா நெறியீ தறி.

71 அறிந்தபடி நில்லா தகம்பாவத் தீமை
செறிந்த கொடுநெறியிற் சென்றே—மறித்திவ்
வுலகிற் பலகா லுழல்வாரைச் சேர்ந்தார்
மலவுடலை நீங்கார் மதி.

72 மதிவன்மை பெற்றவொரு மாணவனே மேலாம்
பதியுண்மை காணுபரி பாகன்—மதியில்லா
மக்களையு மீடேற்ற வந்தகுரு நாரணனுக்
கிக்கலியி லீடிலையென் றெண்ணு.

73 எண்ணங் கடந்த விறைநிலையைக் காண்பதற்
கண்ணலரு யேமன மாரியன்சொல்—திண்மையுறப்
பெற்றவரே மீண்டுப் பிறப்பை யொழிக்கவலார்
மற்றவரா லாகா மதி.

74 மதிபருதி விண்வாயு மண்ணீ ரெரியோ
டதிபதியா மான்மவறி வாகிக்—கதியருளு
மத்தனை யன்பர்களை யாட்கொள்ளு மாரியனுப்
வத்துநிலை தன்னைமொழி வான்.

75 மொழியிற் குருமொழியே மோனநிலை காட்டும்
விழியா மொளிர்ஞான வித்தா—மழியாத
விம்மொழியைப் போலவிங் கில்லை சுகமொழிக
ளெம்மொழியு மொவ்வா திதற்கு.

76 இதமகிதம் பேசி யிறைவனிலை காணா
வதமர்போ லாகாம லாசான்—பதமலரைச்
சித்தத் திருத்திச் சிவோகமெனச் சிந்தித்தா
லத்தனுரு நீயாவை யன்று.

77 அன்றுஸன காதியருக் காரணத்தி னுண்மைதனைக்
கன்றுலின் கீழ்மொழிந்த கண்ணுதலே—பின்றெனை
நாரா யணகுருவாய் ஞான மளித்தனனப் [க்கு
பேராளன் றன்புகழே பேசு.

78 பேசுதற்கு மெட்டாப் பிரமமே தானுகி
மாசு தவிர்க்கவல மாகுருவை—நேசமுடன்
போற்றிவாழ் நன்மனமே போதமய மாவாய்நீ
யேற்றவழி யீதலவோ யிங்கு.

79 இங்குறைந்த பாண்டக் கிருக்கின்ற வாசனைபோன்
மங்குமனச் சங்கற்ப வாதனைக—ளங்குமிங்கு
மோயா தலைக்குமதை யோட்டநமக் குற்றதுணை
தேயாத நாரணன்றுள் சேர்.

80 சேர்க்கையினல் வந்தபல தீவினைகள் ஞானகுரு
பார்க்குங் கருணைவிழிப் பார்வையின்றி—யார்க்குமே
தீரா தவைநீங்கித் தேசுபெற வேண்டுவையே
ஞரா யணகுருசொன் ஞடு.

81 நாடுமிட மெல்லா நமதுருவ மாக்கவல
பீடுடைய ஞானம் பிறங்குறு—னீடுலகோர்
தேடருப வாநந்த தீபிகையே நின்வினைகள்
வாடும் படிசெய்து வாழ்.

82 வாழ்வாகு மென்றெண்ணி வையகத்தோர் நாடுகின்ற
தாழ்வாகு மின்பமதைச் சாராமற்—சூழ்வினையைப்
போக்கி யெனையாள் புனிதன்றன் வாக்கியமே
மோக்கந் தருமனமே முந்து.

83 முந்தித் தவங்கிடந்து முத்திநிலை தானடைய
விந்தவுட லெம்மிறைவ னீந்தான்காண்—வந்தவுட
னீங்குதற்கு முன்னே நிலையான வாழ்வடையப்
பாங்குடனே தேசிகன்றாள் பற்று.

84 பற்றற்ற கண்ணை பவமொழிக்கு மென்றதரு
நற்றவநா ராயணன்ற னன்மொழியை—யுற்றுணரா
தல்லும் பகலு மவத்திலே யாழ்நெஞ்சே
நில்லாயோ வென்வமமாய் நீ.

85 நீசெல் வழியே நெடுநா ளலைந்ததனுன்
மாசென்னை நீங்கவில்லை வண்மைமலி—மாசென்னை
நாரா யணகுருவான் ஞான வடிவானேன்
சேராயோ யென்னுடனெஞ் சே.

86 நெஞ்சே யொருகணமு நில்லாமற் றீயவழிக்
கஞ்சாம லென்னை யழைத்துப்போய்—வஞ்சப்
படுகுழியிற் றள்ளுதற்குப் பண்ணு முன்றன் சூழ்ச்சி
கடுகளவுஞ் செல்லாது காண்.

87 காணுங் கயிற்றரவுங் கானலிற்றோன் றும்புனலும்
பூணு மயக்காற் பொருந்துவபோன்—மாணு
மெனதுருவிற் கற்பிதமா யெல்லா வுலகு
மனவிரிவாற் றோன்றுமறி வாய்.

88 தோன்று மறிவன்றித் தொல்லுலகம் வேறில்லை
யூன்றி யறிவாயென் றாக்கியே—கான்ற
வசனத்தைப் போல வகிலவின்ப மென்றோர்
வசனத்தா னீக்கினன்றாள் வாழ்த்து.

89 வாழ்த்துதற்கு நாவு மன்னு மனமாரத்
தாழ்த்தி வணங்கத் தலையுமுற்றும்—பாழ்த்த
வகம்பாவத் தாலே யழிகின்ற நெஞ்சே
சுகம்பெறலாம் நாரணன்பேர் சொல்.

90 சொல்லும் பொருளெல்லாந் தோற்றமெனக் காட்டியிங்
கெல்லையிலா வின்ப மெனக்களித்த—வல்லவனைத்
தம்முள்ளே வைத்துச் சதாகாலஞ் சிந்திக்கு
மெம்மனோர்க் குண்டோ விடர்.

91 இடரெல்லாம் போக்கு மெழிலார்வே தாந்தக்
கடலெலா முண்டு களித்துப்—படிமீதி
லின்பமழை பெய்ய வெழுமுகிலா நாரணனே
வன்பவநோய் தீர்க்கு மருந்து.

92 மருந்துகண் டோடு மதலைதனைத் தாயா
ரருந்துணவைக் காட்டி யழைத்து—மருந்தைமெல
வூட்டுவது போலநமக் குண்மைநிலை தன்னைமெலக்
காட்டியநா ராயணன்றாள் கா.

93 காகா வெனக்கரையுங் காக்கைபோன் முன்கதையை
நாகாய வேபறையு நாவலர்பா—லேகாமன்
மோகாதி யெல்லா முனிந்தகுரு நாராணன்று
ணீகாவாய் நெஞ்சே நிதம்.

94 நிதமுங் குருவடிவை நீநினைந்தா னெஞ்சே
பதம்பெறுவாய் சொன்னேனிப் பார்மே—லதமவழிச்
செல்லாம லென்னுடனே சேருவையேற் பேரின்ப
மெல்லா முனதுவச மே.

95 உனதுவசப் பட்ட வுயிர்களெலா மண்ணை
யெனதெனதென் றென்றும்போ ரிட்டுத்—தனதுரு
காட்டுநா ராயணன்றன் கான்மலரைச் சாராமற் [வைக்
காட்டமடைந் தார்நெஞ்சே காண்.

96 காணாப்பொ னெஞ்சமே கர்ப்பா சயக்குழியில்
வாணாளிற் பட்டதுயர் மண்மீதில்—வீணாக
வந்தவழி தன்னிற்போய் மாழாமல் வாழ்வளித்த
வெந்தையா நாரணன்றாளேத்து.

97 எத்தித் தொழுவா ரிடரகற்று நாரணரின்
கோத்திரத்தில் வந்தார் குறைநீங்கிப்—பாத்திரரா
யுள்ளத் திருணீங்கி யோங்குபே ரானந்த
வெள்ளமய மாவார் விரைந்து.

98 விரைந்துவா நெஞ்சே வெகுநாளாய் வாட்டு
மரந்தையெலா நீக்கியறி வாக்கி—நிரந்தரமும்
பூரணசு யாட்சியுடன் பூவுலகில் வாழவைத்த
நாரணனைப் போற்றிடுவோ நாம்.

99 நாமே பலநூலை நாடோறுங் கற்றாலும்
போமோ வறியாமை பூரணமாய்—நாமேவு
பாரதத்தி லேகலைவன் பண்ணுகுரு பத்தியைப்போ
னாரணன்பா லன்புசெய்வோ நாம்

100 நானா னெனுமகந்தை யானவிந்து வாடாமற்
றானாகுஞ் சின்மயத்தைத் தான்காட்டுங்—கோனாது
நாரா யணாய நமவென்று நாடோறும்
பாரா யணம்பண்ணிப் பார்.

நூற்பயன்.

தேசிகநா ராயணன்மேற் செப்புதிரு வந்தாதி
மாசிலா வீட்டினிடை வாஞ்சைகொளு—நேசரெலா
மேறிப் படிப்படியா யின்படைய விவ்வெண்பா
நூறும் படியா நவல்.

முற்றிற்று.